6432
R65(...)

॥ ओं ॥

श्रीविद्यारण्यमुनिभिः कृता

# ॥ ब्रह्मविदाशीर्वादपध्दतिः ॥

ஸ்ரீ வித்தியாரண்யஸ்வாமிகள்

அருளிச்செய்த

# பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி

மூலமும்

தஞ்சை

ஸ்ரீ பிரஹ்மா[illegible]ஸ்வாமிகள்

இயற்[illegible]

தமிழ்மொழி [illegible]

இரண்டாம் பதிப்பு

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாஸ சாரதாமந்திர பிரஸில்

பதிக்கப்பட்டது.

Copy Right Reserved.

விலை அணு ௨

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE : [illegible]

௨0-5

|| ओं ||

श्रीविद्यारण्यमुनिभिः कृता

# || ब्रह्मविदाशीर्वादपद्धतिः ||

ஸ்ரீ வித்தியாரண்யஸ்வாமிகள்

அருளிச்செய்த

## பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி

மூலமும்

தஞ்சை

ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள்

இயற்றிய

தமிழ்மொழிபெயர்ப்பும்

இரண்டாம் பதிப்பு

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாஸ சாரதாமந்திர பிரஸில்

பதிக்கப்பட்டது.

Copy Right Reserved.

விலை அணா உ.

ஸ்ரீ கணேசாய நம:

# முகவுரை.

பிரஹ்மவித்தாசீர்வாதபத்ததி யென்னும் இந்நூல் பிரஹ்மஞானிகளின் ஆசீர்வாத முறைமையினை யறிவிப்பதாம். இதனைச் சதுர்வேத பாரங்கதராய் அந்நால்வேதங்கட்கும் பாஷியமியற்றி யருளியவரும், அளவிறந்த வித்தைக்கிடனாயிருந்தமைபற்றி *வித்தியாரண்ணியரென்னும் காரணப்பெயர் பெற்றவருமாகிய பெரியார், சர்வ சம்சயங்களையும் ஒழித்து அப்பிரதிபந்த சாக்ஷாத்கார வாயிலாக, நிரதிசயானந்தத்தினைத் தரும் ஸ்ரீ பஞ்சதசி யென்னும் வரப்பிரசாத நூலை இயற்றிய பின்னர், ஜீவன்முக்திஸ்வரூபம், அதில் பிரமாணம், அதன் சித்தி, அச்சீவன் முக்திசித்தியினாலாம் பயன் என்பவற்றை மந்த மதியினரு முணருமாறு எளிய வசன நடையில் ஜீவன்முக்திவிவேகமென்னும் நூலை இயற்றியருளினர். அதனையும் பார்க்கச் சக்தியில்லாதவர்களுக்கு இச்சிறிய நூலை மிக வெளிய நடையில் அச்சீவன்முக்தி விவேகத்தின் சம்

---

* இப்பெரியாராகிய ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகளின் சரித்திரம் ஸ்ரீபஞ்சதசியின் முகவுரையில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றமையால் இச்சிறு நூலில் எழுதப்படவில்லை.

கிரகவடிவமாயும், சர்வ சுருதிகளின் சாரபூதமாயு மியற்றியருளினர். ஜீவன்முக்தி சித்தியை விரும்பிய வர்களுக்கு இந்நூல் இன்றியமையாததாய் இருத்தல் பற்றி இதனைத் தமிழுணர்ச்சி யுடையாரும் அறிந்தா னந்திக்குமாறு தமிழில் எளிய வசன ரூபமாக்கி, அத்தோடு ஆரியமுணர்ந்தாரும் ஆனந்திக்குமாறு ஸ்ரீ வித்யாரண்ணியசுவாமிகளால் இயற்றப்பட்ட கத்தியரூப சம்ஸ்கிருத வசனத்தையும் சேர்த்து அச்சிட லாயிற்று. இந்நூலிற் பிழைகள் ஏதேனும் ஏற்படு மாயின் பெரியோர் க்ஷமித்து எனக் கறிவிப்பார்களா யின், அவற்றை மறு பதிப்பில் திருத்தி வெளியிடச் செய்கிறேன்.

இந்நூலை யச்சிடத் தங்களிடமிருந்த சம்ஸ்கிருதக் கையெழுத்துப் பிரதிகளை உதவிபுரிந்த எமது குருபந்துவாகிய ஸ்ரீமத் இராகவானந்த பரமஹம்ஸ ஸ்வாமிகளுக்கும், புதுக்கோட்டை சமஸ்தானம் ரிஜிஸ்ட்ரார் பிரஹ்மஸ்ரீ ஆர். முத்துசாமி அய்யரவர்களுக் கும் என் வந்தனம் செலுத்துவதோடு அவர்கள் உப காரத்தை யுணர்ந்து இந்நூல் இந்நில வுலகத்து நீடி த்துலாவுமாறு செய்யவல்ல எம்பிறைவனை யும் பிரார்த் திக்கின்றேன்.

வி. பிரஹ்மாநந்த ஸ்வாமிகள்.

॥ श्रीगणेशाय नमः ॥

20-5

॥ अथ ॥

# ॥ ब्रह्मविदाशीर्वादपद्धति ॥

॥ लिख्यते ॥

ॐ ॥ हिरण्यगर्भादिस्थावरांतेषु शरीरेषु यदेकं चैतन्यमस्ति तदेवाहमस्मीति दृढज्ञानसिद्धिर्भूयात् ॥ १ ॥

लयविक्षेपकषायरसास्वादेभ्यो रक्षितं मे चित्तमविघ्नेन ब्रह्मण्यवस्थितं भूयात् ॥ २ ॥

नित्यानिर्विकारासंगाद्वितीयपरिपूर्णसच्चिदानंदस्वप्रकाशचिदेकरसब्रह्मानुभवसिद्धिर्भूयात ॥ ३ ॥

अहमादिदृश्यविलक्षणास्मत्प्रत्ययानुभूतप्रत्यक्चिन्मात्रानुभवसिद्धिर्भूयात् ॥ ४ ॥

सजातीयविजातीयस्वगतभेदरहिताखंडसच्चिदानंदानुभवसिद्धिर्भूयात ॥ ५ ॥

नित्यशुद्धबुद्धमुक्तसत्यपरमानंदाद्वितीयब्रह्मात्मानुभवसि-
द्धिर्भूयात् ॥ ६ ॥

स्वगतादिभेदरहितसच्चिदानंदलक्षणब्रह्माभिन्नकूटस्थप्रत्य-
क्स्वरूपसर्वसाक्षिचिद्रूपानुभवसिद्धिर्भूयात् ॥ ७ ॥

स्वात्मनोऽन्यत्वेन प्रतिभातं सकलं साक्ष्यं जगत् स्वाविद्या-
विलसितत्वेन स्वानन्यत्वात्स्वात्ममात्रमित्यद्वितीयब्रह्मात्मानु-
भवसिद्धिर्भूयात् ॥ ८ ॥

असंभावनाविपरीतभावनाराहित्त्येन करतलामलकवदहं
ब्रह्मास्मीत्यप्रतिबंधापरोक्षब्रह्मात्मसाक्षात्कारो दृढीभूयात् ॥९॥

यो ब्रह्मादिस्तंबपर्यंतानां सर्वेषां प्राणिनां देहमध्ये तत्त-
द्देहसाक्षित्वेन भासमानः परिपूर्णात्मास्ति सोयं परमात्मा
केवलं मुमुक्षोः पुरुषस्य मे स्वरूपमित्येवंरूपात्मसाक्षात्कारो
दृढीभूयात् ॥ १० ॥

इदं सर्वमात्मैव प्रतीयमानं तु रूपरसादिकं जगन्मायामयं न त्वेतद्वस्तुतोस्तीति तत्त्वनिश्चयो मे दृढीभूयात् ॥ ११ ॥

वासनाक्षयमनोनाशतत्त्वज्ञानाभ्यासवशाज्ज्ञानरक्षा तपःसिद्धिः सर्वसमत्वं दुःखनिवृत्तिः सुखाविर्भाव इत्येतत्पञ्चप्रयोजनसिद्धिर्भूयात् ॥ १२ ॥

मैत्री करुणा मुदितोपेक्षेति सद्वासनापाटवेन रागादिदुर्वासनाक्षयः सम्यग्भूयात् ॥ १३ ॥

निरंतरात्मानुसंधानवशान्मनसो वृत्तिरूपपरिणामपरित्यागेन निरुद्धताकारेणात्मपरिणामो दृढीभूयात् ॥ १४ ॥

शमादिपूर्वकश्रवणमनननिदिध्यासनाभ्यासबलाद्विषयासक्तिः प्रज्ञामांद्यं कुतर्को विपर्ययदुराग्रहश्चेति वर्तमानप्रतिबंधचतुष्टयनिवृत्तिद्वारा अप्रतिबंद्धापरोक्षब्रह्मसाक्षात्कारो दृढीभूयात् ॥ १५ ॥

उपक्रमादिषड्विधलिंगैरशेषवेदांतानामद्वैते ब्रह्मणि तात्पर्यावधारणं दृढीभूयात् ॥ १६ ॥

श्रीगुरुमुखाच्छ्रुतस्याद्वितीयवस्तुनो वेदांतानुगुणयुक्तिभिरनवरतमनुचिंतनं भूयात् ॥ १७ ॥

विजातीयदेहादिप्रत्ययानंतरितसजातीयसच्चिदानंदात्मप्रत्ययप्रवाहो निरंतरं भूयात् ॥ १८ ॥

असंगोहं चिदात्माहमिति प्रत्यगात्मनि निवेशिते वृत्तिरहिते संस्काराभेदमात्रतया सूक्ष्मरूपेणावस्थिते चित्ते आत्मनः स्वरूपभूतपरमानंदो निरंतरं सम्यगाविर्भूयात् ॥१९॥

अहमात्मा साक्षी केवलचिन्मात्रस्वरूपो नाज्ञानं तत्कार्यं च किंतु नित्यशुद्धबुद्धमुक्तसत्यपरमानंदाद्वयं ब्रह्मैवाहमस्मीत्यभेदेनावस्थानस्समाधिरंतस्समाधिना दृग्दृश्यविवेके बहिः समाधिना ब्रह्मसर्गविवेके च दृढे ज्ञाते तेन विवेकद्वयेनायं विगळितदेहाभिमानो विज्ञातमात्मतत्त्वश्च सदा भूयात् ॥२०॥

देहाद्बहिः सकलनामरूपात्मकेषु वस्तुष्वपि सर्पधारादिषु-रज्जुरिव व्याप्तः सच्चिदानंदलक्षणो यः परमात्मा स एव परशब्देनोच्यते। अंतरहमादिदृश्यविलक्षणोऽस्मत्प्रत्ययालंबनभूतः प्रत्यक्चिन्मात्ररूपः साक्ष्याख्यो यो जीवात्मा स एवावरशब्देनोच्यते ॥ परश्चासाववरश्चेति परावरः प्रत्यगभिन्नः परमात्मा स एवमंतर्बहिः पररूपेणावररूपेण चावस्थिते परमार्थतः परावरविभागरहिते प्रत्यगभिन्ने परावरे ब्रह्मणि त्वं वाहमस्मि भगवो देवतेऽहं वा त्वमसीति श्रुत्यनुसारेणाहं ब्रह्मास्मि ब्रह्मैवाहमस्मीति व्यतिहारेणाखंडैकरसत्वेन साक्षात्कृते सति तेन परावरब्रह्मसाक्षात्कारेणास्य परावरब्रह्मसाक्षात्कृतवतो मम हृदयग्रंथिभेदः सर्वसंशयानिवृत्तिः सर्वकर्मक्षयरूपः परमपुरुषार्थः सम्यगाविर्भूयात् ॥ २१ ॥

अहंकारात्मनोरेकत्वभ्रमानिवृत्तिरूपोयं ग्रंथिभेदो दृढीभूयात् ॥ २२ ॥

आत्मा देहादिव्यतिरिक्तो न वा। व्यतिरिक्तत्वेपि कर्तृत्वादिधर्मयोगी न वा। अकर्तृत्वेपि तस्य ब्रह्मणोऽभेदोस्ति वा न वा। अभेदेपि तज्ज्ञानं कर्मादिसहितं मुक्तिसाधनं केवलं वा। केवलेपि आत्मा साक्षी वा कर्ता वा। साक्षित्वेप्यस्य ब्रह्मत्वमस्ति वा न वा। ब्रह्मत्वेपि तद्बुद्ध्या वेदितुं शक्यं वा न वा। शक्यत्वेपि तद्वेदनमात्रेण मुक्तिरस्ति वा न वा। मम परमार्थतो ब्रह्मत्वमस्ति वा न वा। ब्रह्मत्वेपि तादृग्रूपं मम साक्षात्कृतं वा न वा। साक्षात्कृतेपि इतःपरं कर्तव्यमस्ति वा न वा। कर्तव्याभावेपि इदानीं मम जीवन्मुक्तत्वमस्ति वा न वा। जीवन्मुक्तत्वेपि वर्तमानदेहपातानंतरं विदेहमुक्तिर्भविष्यति वा न वा। तत्प्राप्तावपि कालांतरेषु पुनर्जन्म भविष्यति वा न वेत्यादि सर्वसंशयनिवृत्तिर्भूयात् ॥ २३ ॥

अनारब्धानामागामिजन्महेतूनामनेककोटिजन्मार्जितानां प्रारब्धव्यतिरिक्तानां संचितकर्मणां निवृत्तिरूपः परमपुरुषार्थः सम्यग्भूयात् ॥ २४ ॥

यत्पूर्णानंदैकबोधस्तद्ब्रह्माहमस्मीति ब्रह्मात्मानुभवमात्रपर्यवसाने बुद्धिर्निरंतरं भूयात् ॥ २५ ॥

यस्मिन्काले द्वैतभानं नास्ति निद्रापि नागच्छाति तस्मिन्काले उपलभ्यमानं यत्सुखमस्ति स ब्रह्मानंद इति ब्रह्मानंदानुभवसिद्धिर्निरंतरं भूयात् ॥ २६ ॥

मनोऽव्यापाराभावसमये यत्सुखं भासते तत्सुखमात्मस्वरूपमित्यात्मनिश्चयः सम्यक् भूयात् ॥ २७ ॥

स्वस्वप्नः स्वातिरेकेण यथा नास्ति तथैव जाग्रदपि स्वातिरेकेण नास्तीत्याद्वितीयात्मानुभवः सम्यग्भूयात् ॥२८॥

वासनाक्षयमनोनाशाभ्यां निर्वासने वृत्तिशून्ये चित्त संशयविपर्ययदोषद्वयाभावेन प्रतिबंधाभावादुत्पन्नं तत्त्वज्ञानमबाधितत्वेन सुरक्षितं भूयात् ॥ २९ ॥

पञ्चम्यादिभूमित्रयरूपायां जीवन्मुक्तौ संपाद्यमानायां द्वैताभासाभावेन संशयविपर्ययप्रसंगाभावादुत्पन्नं तत्त्वज्ञानमबाधितत्वेन सुरक्षितं भूयात् ॥ ३० ॥

स्वप्ने स्थूलशरीराभानेपि यस्मिन् जाग्रदाद्यवस्थाचतुष्टये यश्चिद्रूपात्मा मणिसूत्रमिवानुस्यूततया निरंतरं भासते सच्चिद्रूपात्मैवाहमस्मीति शरीरत्रयं नाहमस्मीत्यन्वयव्यतिरेकाभ्यां शरीरत्रयस्य व्यावृत्तिं तत्साक्षिचैतन्यस्यानुवृत्तिं च पश्यतो मम शरीरत्रयव्यतिरिक्तत्वानुभवः सम्यगाविर्भूयात् ॥ ३१ ॥

भगवंतं परमेश्वरं प्रीतिपूर्वकं भजतो ममोपर्यनुग्रहार्थं भगवान् वासुदेव आत्मभावस्थः सन् विवेकरूपेण भक्तप्रसादस्नेहसिक्तेन मद्भावनाभिनिवेशवातेरितेन ब्रह्मचर्यादिसाधनसंस्कारवत्प्रज्ञावर्तिना विरक्तांतःकरणाधिकरणेन विषयव्यावृत्तचित्तरागद्वेषाकलुषितनिवातापवरकस्थेन नित्यप्रवृत्ते-

काग्र्योध्यानजनितसम्यक्दर्शनभास्वता ज्ञानदीपेन अज्ञानजमविवेकतो जातं मिथ्याप्रत्ययरूपः मोहांधकारं तमो नाशयत्वित्याशीर्निरंतरं भूयात् ॥ ३२ ॥

परमेश्वरं प्रीतिपूर्वकं भजंतो भक्ता येन बुद्धियोगेन सम्यग्दर्शनलक्षणेनात्मभूतं भगवंतं परमेश्वरमात्मत्वेनोपयान्ति प्रतिपद्यते तं बुद्धियोगं भगवान् वासुदेवो मे ददात्वित्याशीर्निरंतरं भूयात् ॥ ३३ ॥

असंगोहं चिदात्माहमिति प्रत्यगात्मनि निवेशिते वृत्तिरहिते संस्कारशेषमात्रतया सूक्ष्मरूपेणावस्थिते चित्ते आत्मनः स्वरूपभूतपरमानंदो निरंतरं सम्यगाविर्भूयात् ॥ ३४ ॥

विकारमंतरेण स्वाध्यस्तं सर्वं साक्षादव्यवधानेन स्वरूपाभेदेनेक्षंते पश्यंतीति साक्ष्यनुभवः सम्यक् भूयात् ॥ ३५ ॥

देहेंद्रियादिसकलजडावभासकत्वेन चिद्रूप इति चिदात्मानुभवः सम्यग्भूयात् ॥ ३६ ॥

आत्मनि कदाचिदप्रियत्वाभावेन परमप्रेमास्पदत्वेन च आत्मा परमानंदरूप इत्यानंदात्मानुभवः सम्यग्भूयात् ॥ ३७ ॥

अभावरूपस्य विश्वस्य भारूपचैतन्यस्य सन्निधेर्विना कदाचिद्भानाभावाद्भारूपात्मा सर्वगत इति सर्वगतानुभवः सम्यग्भूयात् ॥ ३८ ॥

असज्जडदुःखात्मकाहंकारादिभ्यो विलक्षणतया प्रातिकूल्येन सत्यज्ञानानंदरूपेण चितिः प्रकाशक इति प्रत्यगात्मानुभवसिद्धिर्भूयात् ॥ ३९ ॥

पश्चाद्भासमानस्य जडस्य प्रथमतो भासमानं चैतन्यमेव वास्तवं रूपमिति निश्चित्य जडमुपेक्ष्य चिन्मात्रमेव चित्तं निरंतरं भूयात् ॥ ४० ॥

सर्वाण्येतानि प्रज्ञानस्य नामधेयानि भवंतीति वाक्येन देहेंद्रियादिसाक्षिरूपं यत्प्रज्ञानं त्वंपदार्थरूपं निर्णीतं तदेवैष ब्रह्मेत्यादिवाक्येन जगत्कारणतया निर्णीतं परं ब्रह्म न चानयोरीषदपि भेदोऽस्तीति ऐतरेयमहावाक्यजन्यज्ञानसिद्धिर्निरंतरं भूयात् ॥ ४१ ॥

यतः सर्वत्रावस्थितं प्रज्ञानं ब्रह्मातो मय्यवस्थितं प्रज्ञानं ब्रह्मैव प्रज्ञानत्वाविशेषात् इत्यैतरेयमहावाक्योक्तजीवब्रह्मैक्यज्ञानसिद्धिर्निरंतरं भूयात् ॥ ४२ ॥

आत्मसन्निधौ विद्यमानत्वेन जडरूपस्यापि देहेंद्रियादेर्भासमानत्वादात्मा चिद्रूप इति चिदात्मानुभवः सम्यग्भूयात् ॥ ४३ ॥

आत्मसहितत्वेन दुःखात्मकस्य देहादेरेपि प्रियतमत्वाद्दात्मा परानंदरूप इत्यानंदानुभवः सम्यग्भूयात् ॥ ४४ ॥

देशतो कालतो वस्तुतः परिच्छेदराहिताद्वितीयब्रह्मात्मानुभवसिद्धिर्भूयात् ॥ ४५ ॥

पूर्वापरपरामर्शमंतरेण सहसोत्पद्यमानस्य क्रोधादिवृत्तिविशेषस्य हेतोश्चित्तगतसंस्कारस्य विवेकजन्यायां क्षांतिवासनायां दृढायां सत्यां नश्यमानत्वात् बाह्यनिमित्तेन क्रोधाद्यनुत्पत्तिः सम्यग्भूयात् ॥ ४६ ॥

यस्य प्रसादादहमेव विष्णुर्मय्येव सर्वं परिकल्पितं चेतीत्थमात्मस्वरूपं विजानामि तस्य पादारविंदयोरचञ्चला भक्तिर्निरंतरं भूयात् ॥ ४७ ॥

अचिद्रूपस्य सर्वस्य जगतश्चित्सन्निधौ विद्यमानत्वाच्चिद्रूपात्मा सर्वगत इति सर्वगतात्मानुभवः सम्यग्भूयात्॥ ४८॥

सर्वार्थसाधकत्वहेतुना सर्वसंबंधिवत्त्वेन चात्मा सर्वः परिपूर्ण इति परिपूर्णात्मानुभवः सम्यगाविर्भूयात् ॥ ४९ ॥

देशकालाव्यवहितत्वेन पारोक्ष्यहेतोरभावात् साधनांतरनिरपेक्षतया स्वयंप्रकाशमानश्चिदात्मा सर्वदा स्वतःसिद्धापरोक्षरूप इत्यपरोक्षानुभवः सम्यग्भूयात् ॥ ५० ॥

यत्र यद्दृत्वीक्षते तेन वस्तुतान्यत्राननुवागतत्वेनात्मा असंग इत्यसंगानुभवः सम्यग्भूयात् ॥ ५१ ॥

निरवयवत्वेनासंगत्वेन चात्मनः केनापि संबंधाभावादात्मा नित्यमुक्त इति नित्यस्वरूपात्मानुभवः सम्यग्भूयात् ॥५२॥

अवेद्यत्वे सत्यपरोक्षव्यवहारयोग्यत्वादात्मा स्वयंप्रकाश इति स्वयंप्रकाशात्मानुभवः सम्यग्भूयात् ॥ ५३ ॥

साधनांतरनिरपेक्षतया स्वयमेव भासमानत्वादात्मा स्वयंप्रकाश इति स्वयंप्रकाशात्मानुभवः सम्यग्भूयात् ॥ ५४॥

॥इति श्रीविद्यारण्यविरचिता ब्रह्मविदाशीर्वादपद्धतिः समाप्ता॥

॥ ओं तत्सत् ॥

உ

ஓம் தத் ஸத் பிரஹ்மணே நம:

# பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி.

## ஸ்ரீ விநாயகர் துதி.

மங்கை பங்கன் மால்விடை யேறிதன்
கங்கை சூடி கபாலி யீன்றருள்
எங்கை பாசமங் குச மேந்திதா
ணங்கை கூப்பி நாளும் பணிகுவாம்.

## ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் துதி.

நுண்ணிய புத்தி யாரு
நுட்பமில் புத்தி யாரு
நண்ணுதற் கரிய முத்தி
நன்னுறப் பாடி யாதி
யெண்ணரு நூல்கடம்மை
யியற்றிய சீரின் மிக்கான்
றண்ணளி யுடைய மேலோன்
சங்கர பகவற் பாதன்.

வாரிதி சூழு மிந்த
வையகத் துள்ளா ருய்ய
சாரதை தன்னை யென்று
தாபித்தான் பீடமொன்று
பூரண செளருப னன்னோன்
புகழ்த்திரு வடிப்பூச் சூடிற்
காரிருணீங்கி யாமுங்
கரையிலின் பெய்த லாமே. (உ)

ஸ்ரீ வித்தியாரணியஸ்வாமிகள் துதியும் நூற்பிரதிஞ்ஞையும்.

சீரிய வேதாந்த மென்னுஞ்
சீயமே முதலா வித்தைக்
காரணி யம்போ லுள்ள
மமைந்தகா ரணத்தால் வித்தி
யாரணி யப்பேர் பெற்றோ
யாரருண் மூர்த்தி நின்றன்
சீரிய பதங்கள் போற்றிச்
செப்புவன் றமிழி னிந்நூல். (௩)

## நூல்.

இப்போது பிரஹ்மவித்யாசீர்வாதபத்ததி எழுதப்படுகின்றது :—

ஹிரண்ய கர்ப்பர் முதல் ஸ்தாவரமீறாயுள்ள சரீரங்களில் எவ்வொரே சைதன்னியம் இருக்கின்றதோ அதுவே யான் என்று * திடஞான சித்தி உண்டாகுக. (க)

† லய விக்ஷேப கஷாய ரஸாஸ்வாதங்களினின்றும் இரக்ஷிக்கப்பட்ட என் சித்தம் விக்கினமின்றியதாகப் பிரஹ்மத்தில் நிலைப்பதாகுக. (உ)

---

* சந்தேக விபரீதமின்றிய ஞானத்தினைத் திடஞானமென்பர்.

† நிர்விகற்பசமாதிக்குத் தடையாயுள்ள லயம், விக்ஷேபம், கஷாயம், ரஸாஸ்வாதம் என நான்காம்,

க. சோம்பலினாலாவது நித்திரையினாலாவது விருத்தியின் இன்மை லய மெனப்படும்.

உ. வெளிமுகப்பட்ட விருத்தியினை விக்ஷேப மென்பர்.

ங. இராகாதி தோஷத்தினை அதாவது இராகாதிகளின் வெளிப்பட்ட சம்ஸ்காரத்தினைக் கஷாய மென்பர்.

நித்திய நிர்விகார அசங்க அத்விதீய பரிபூரண சச்சிதானந்த * சுவப்பிரகாச † ஏகரஸ பிரஹ்மாநுபவ சித்தி உண்டாகுக. (௩)

யான் முதலிய ‡ திருசியங்களுக்கு வேருய் யான் என்னும் பிரத்தியயத்தி(உணர்ச்சியி)னல் அநுபவிக்கப்படும் ¶ பிரத்தியக் சின்மாத்திராநுபவ சித்தி உண்டாகுக. (௪)

§ ஸஜாதீய விஜாதீய சுவகத பேதமின்றிய அகண்ட சச்சிதானந்தாநுபவசித்தி உண்டாகுக. (௫)

---

௪. யோகிக்குச் சமாதியில் விக்ஷேபத்தினலாகிய துக்கத்தின் நிவிருத்தியால் எந்த ஆனந்தமுண்டாகின்றதோ அதன் அநுபவம் ரஸாஸ்வாத மெனப்படும்.

* சுவப்பிரகாசம்=தன்னெளி.

† ஏகரஸம்=ஞானமொன்றே வடிவம். வஸ்துவின் சொரூபமாகிய ஞானம் சித்தெனப்படும்.

‡ திருசியம்=காணப்படுபொருள்.

¶ பிரத்தியக்=உள்.

§ க. தனக்குத் தன்னினத்தோடுள்ள பேதம் ஸஜாதீய பேதம். அது பிராஹ்மணனுக்குத் தன்னினமாகிய மற்றப் பிராஹ்மணனேடுள்ள பேதம் போலாம்.

நித்திய சுத்த முக்த சத்திய பரமாநந்த அத்விதீய பிரஹ்மாத்மாநுபவ சித்தி உண்டாகுக. (சு)

சுவகதாதி பேதமின்றிய சச்சிதாநந்த லக்ஷண * பிரஹ்மாபின்ன † கூடஸ்த பிரத்தியக்சொரூப சர்வசாக்ஷியான சித்ரூபாநுபவசித்தி உண்டாகுக. (எ)

தனதாத்மாவிற் கந்நியமாகச் சகல ‡ சாக்ஷியமான ஜகத்தும் $ தனது அவித்தையினால் விளங்குவதாந் தன்மையால் தனக்கந்நியமாகாதிருத்தலின் தனதாத்யா

---

உ. தனக்கு வேற்றினத்தோடுள்ள பேதம் விஜாதீய பேதம். அது பிராஹ்மணனுக்கு வேற்றினமாகிய சூத்திராதியோடுள்ளபேதம் போலாம்.

ங. தனக்குத் தன்னுறுப்புகளோடுள்ள பேதம் சுவகத பேதம். அது பிராஹ்மணனுக்குக் கைகால்முதலிய தன் அவயவங்களோடுள்ள பேதம் போலாம்.

* பிரஹ்மம்=வியாபகவஸ்து. அபின்னம்=வேறுபடாமை.

† கூடஸ்தன்=நிச்சலன், நிர்விகாரி.

‡ சாக்ஷியினால் அறியப்படுவது சாக்ஷியம்.

$ தன்னை அறியாததினால்.

மாத்திரமாமென்னும் அத்விதீய பிரஹ்மாத்மாநுபவ சித்தி உண்டாகுக.

(அ)

* அசம்பாவனை விபரீத பாவனையின்றிய தன்மையாகக் † கரதலாமலகம்போல யான் பிரஹ்மமென்னும் அப்பிரதிபந்த அபரோக்ஷபிரஹ்மாத்ம சாக்ஷாத்காரம் திடமாகுக.

(கூ)

பிரஹ்மாமுதல் ஸ்தாவர பரியந்தமான சர்வப் பிராணிகளின் தேக மத்தியில் அந்தந்தத் தேக சாக்ஷித் தன்மையாக விளங்கும் எந்தப் பரிபூரணாத்மா இருக்கின்றதோ அந்த இப்பரமாத்மா கேவலம் முமுக்ஷு புருஷனாகிய என்னுடைய சுவரூபமாமென்னும் இத்தன்மைய ஆத்ம சாக்ஷாத்காரம் எனக்குத் திடமாகுக.

(க௦)

" இவ்வெல்லாம் ஆத்மாவே; காணப்படுகின்ற ரூபரசாதி ஜகத்து மாயா மயம்; இஃது உண்மையாக இல்லை. " என்னும் தத்துவ நிச்சயம் எனக்குத் திடமுள்ளதாகுக.

(கக)

---

* அசம்பாவனை = ஐயம், விபரீத பாவனை = திரிபு.

† காதலாமலகம் = கைத்தலத்து நெல்லிக்கனி.

* வாசனாக்ஷயமனோநாசதத்துவ ஞானாப்பியாசவசத்தால் † ஞானரக்ஷை, ‡ தபசித்தி, § சர்வசமத்

---

* திடபாவனையால் முன்பின் ஒன்றையும் ஆலோசியாமல் உண்டாகும் குரோத முதலிய விருத்திக்குக் காரணமான சித்தத்தின் சூட்சும நிலைமை வடிவ சம்ஸ்காரமாம். அது சுத்தம் அசுத்தம் என இருவகைத்தாம்.

அவற்றுள்,

க. இடம்பம் அகங்கார முதலிய துர்க்குணங்களான அசுர சம்பத்து முதலியன **அசுத்தவாசனா**. இதனையே **அசுபவாசனை**யென்றும் **மலினவாசனை**யென்றும் கூறுவர். லோகவாசனை, தேக வாசனை, சாஸ்திர வாசனை யென்னும் மூவித வாசனையும் மலின வாசனை யிலடங்கும்.

உ. இவற்றிற்கு வேறாய் ஞானசாதனமாயுள்ள தைவீசம்பத்து முதலியன **சுத்த வாசனை**யாம். இதனையே **சுபவாசனை** யென்றும், **நல்வாசனை** யென்றும் கூறுவர்.

† **ஞானரக்ஷை**யின் லக்ஷணத்தினை இந்நூலில் உசு-வது ௩௦-வது வாக்கியங்களிற் காண்க. விசேஷமாயறிய விரும்புவோர் ஜீவன்முக்திவிவேகம் ௪-வது பிரகரணத்துக்காண்க.

‡ **தவசு** என்பது மனவிந்திரியங்களின் ஏகாக்கிரயோகமாம். அதன் சித்தி தவசித்தியாம். தத்துவஞானத்திற்கு முந்திய மூன்று பூமிகளுக்கும் தவசுத்தன்மை யுளதெனின், நிர்விகற்பசமாதிவடிவ ஐந்தாவது முதலிய மூன்றற்கும் தவசுத்தன்மை யுண்டென்பதனைச் சொல்லுவானேன்?

§ **சர்வசமத்துவம்** கலகவடிவமும் நிந்தை வடிவமுமான விசம்வாதமில்லாமையாம்.

தவம், * துக்கநிவிருத்தி, † சுகாவிற்பாவம் என்னும் இவ்வைந்து பிரயோஜனங்களின் சித்தி உண்டாகுக. (கஉ)

‡ மைத்திரீ, கருணை, முதிதை, உபேக்ஷை என்னும் நல்வாசனையின் முதிர்ச்சியால் இராகாதிதுர்வாசனையின் க்ஷயம் செவ்வனே உண்டாகுக. (கங)

---

* துக்கநிவிருத்தி, சுகாவிற்பாவம் என்னும் இரண்டும் ஸ்ரீ பஞ்சதசியின் பிரஹ்மாநந்தத்துள்ள வித்தியாநந்தமென்னும் சஎ-வது பிரகரணத்தில் செவ்வையாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இங்குச் சுருக்கமாய்க் கூறுவாம்:— அவித்தியாதிபஞ்சக்கிலேச மில்லாதிருத்தல் துக்கநிவிருத்தி.

ஞான ரக்ஷை முதலிய நான்குமிருத்தலால் தனக் கெவ்விதபந்தமு மில்லாதிருத்தல் சுகாவிற்பாவம்.

† மைத்திரியாதி நான்கன் இலக்கணம் வருமாறு:—

க சற்புருஷர்களிடத் துண்டாகும் ஸ்நேகம் மைத்திரீ.

உ. துக்கிகளிடத் துண்டாகும் இரக்கம் கருணை.

ங. புண்ணியஞ் செய்பவரிடத்துண்டாகும் சந்தோஷம் முதிதை.

சு. பாபிகளிடத்துத் துரும்பிற்போல் விருப்பு வெறுப்பு இல்லாதிருத்தல் உபேக்ஷை.

நிரந்தர ஆத்மாநுசந்தாநவசத்தால் மனதுக்கு * விருத்தி வடிவ † பரிணாமநீக்கத்தால் நிரோதிக்கப் படுந்தன்மைவடிவ ஆத்மபரிணாமம் திடமா யுண்டாகுக. (௧௪)

சமமுதலியவற்றை முன்னிட்ட சிரவண மனன நிதித்தியாசனுப்பியாசவலியால் ‡ விஷயாசக்தி, பிரஞ்

* விருத்தி=ஞானம். அவை பிரமாணம், விபரியயம், விகற்பம், நித்திரை, ஸ்மிருதி என்பனவாம். இவற்றின் இலக்கணம் எம்மாற் செய்யப்பட்டுள்ள பாதஞ்சலவுரையிற் காண்க. இங்கு விரிவஞ்சி விடுத்தனம்.

† ஒரு பொருள் தான் முன்னிருந்த நிலையினை விட்டு வேறுநிலையினை யடைதல் பரிணாமம் (திரிபு.)

‡ ௧. சித்தத்திற்கு விஷயத்தினாலுண்டாகும் ஆசை விஷயாசக்தி. ௨. புத்திக்குக் கிரகணதாரணை (கொள்ளல் தரித்தல்) வடிவகூர்மையின்மை புத்திமாந்தியம். ௩. சுஷ்க (வறண்ட) தர்க்கமுடையவனா யிருத்தலால் சுருதியர்த்தங் களை வேறுவிதமாகக் கற்பித்தல் குதர்க்கம். ௪. ஆத்மா கர்த்திருத்துவமுதலிய தர்மங்களோடு கூடியதென்னும் உணர்ச்சி வடிவ விபரீயுத்தில் யுக்தியின்றி அடஞ்செய்தல் விபரீய யதுராக்கிரகம்.

இவை நான்கும் முறையே சமமுதலியஆறு, சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவற்றால் நீங்குமெனக் கூறப்பட்டது.

ஞாமாந்தியம், குதர்க்கம், விபரியயதுராக்கிரகம் என்னும் வர்த்தமானப் பிரதிபந்தம் நான்கன் நீக்கவாயிலாகப் பிரதிபந்திக்கப்படாத அபரோக்ஷப்பிரஹ்மசாக்ஷாத்காரம் திடமாகுக. (௧௫)

* உபக்கிரமமுதலிய அறுவகை இலிங்கங்களால் † சகல வேதாந்தங்களுக்கும் அத்வைதப் பிரஹ்மத்தில் தாற்பரிய நிச்சயஞ் செய்தல் திடமாகுக (௧௬)

ஸ்ரீ குருமுகமாகக் கேட்கப்பட்ட அத்வைத வஸ்துவினை வேதாந்தத்தைத் தழுவிய யுக்திகளினால் அநவரதம் (இடைவிடாது) சிந்தித்தல் உண்டாகுக (௧௭)

---

* உபக்கிரமாதி அறுவகை லிங்கங்களாவன:— ௧. உபக்கிரமவுபசங்காரம், ௨. அப்பியாசம், ௩. அபூர்வதை, ௪. பலம், ௫ அர்த்தவாதம், ௬. உபபத்தி என்பனவாம். இவற்றின் இலக்ஷணம் எம்மாற் செய்யப்பட்ட விவேகசிந்தாமணி, பஞ்சதசிவுரை முதலியவற்றில் விஸ்தாரமாய் எழுதியிருத்தல்பற்றி இங்குப் பெயர்மாத்திரம் கூறப்பட்டது.

† வேதத்தின் அந்த (கடைப்) பாகமாகிய உபநிஷதங்கள் **வேதாந்த** மெனப்படும். அவற்றின் வழிநூல் சார்பு நூல்களும் வேதாந்த மென்றே வழங்கப்படும்.

* விஜாதீயதேகாதிப் பிரத்தியய (ஞான) த்தின் இடையின்றிய ஸஜாதீய சச்சிதாநந்த ஆத்மப் பிரத்தியப் பிரவாகம் (ஒழுக்கு) நிரந்தரம் உண்டாகுக. (கஅ)

அசங்கன் யான் சிதாத்மா யான் என்று பிரத்தியகாத்மாவில் செலுத்தப்பட்ட விருத்தியின்றிய சம்ஸ்கார பேதமாத்திரமாய்ச் சூக்ஷ்ம வடிவமாக நிலைத்திருக்கும் சித்தத்தில் ஆத்மாவின் சொரூப வடிவ பரமாநந்த நிரந்தரம் செவ்வையாக வெளிப்படுக. (கசு)

யான் ஆத்மா; சாக்ஷி; கேவல சின்மாத்திர சொரூபன். அஞ்ஞானமும் அதன் காரியமும் இல்லை. ஆனால் நித்திய சுத்த புத்த முக்த சத்திய பரமாநந்தாத்வப் பிரஹ்மம் யான் என்று அபேதமாக நிலைப்பது சமாதி. உட்சமாதியினால் † திருக்குத்திருசியவிவேகமும், வெளிச்சமாதியினால் பிரஹ்மஸர்க்கவிவேகமும் திடமாய் அறியப்பட்ட போது அந்த விவேகமிரண்டினால் இவன் கரைந்த

---

* விஜாதீயம்=வேற்றுஜாதி. ஸஜாதீயம்=சமானஜாதி.
† திருக்கு=காண்பான்;

தேகாபிமானமுடையவனும், அறியப்பட்ட ஆத்ம தத்துவமுடையவனுமாக எப்போதும் ஆகக்கடவன். (உ0)

தேகத்திற்கு வெளியில் சகல நாமரூபவடிவமான வஸ்துக்களிலும் சர்ப்பம் தாரைமுதலியவற்றில் இரஜ்ஜுவினைப்போல வியாபித்ததான சச்சிதானந்த பரமாத்மா எதுவோ அதுவே பரம் என்னும் சொல்லால் சொல்லப்படுகிறது. உள்ளே யான் முதலிய திருசிய விலக்ஷணமாய் யான் என்னும் பிரத்தியயத்தின் பற்றுக்கோடு வடிவினதாய்ப் பிரத்தியக்குச் சின்மாத்திர வடிவினதாய்ச் சாக்ஷி யென்னும் பெயருள்ள ஜீவாத்மா எதுவோ அதுவே அவரம் என்னும் சொல்லால் சொல்லப்படுகிறது. பரமே அவரம் என்பதனால் பராவரமென்பது பிரத்தியகபின்ன பரமாத்மாவாம். அதுவே உள்ளும் வெளியும் பரரூபமாகவும் அவரரூபமாகவும் நிலைத்துள்ளதும், பரமார்த்தமாகப் பராவரவிபாகமின்றியதுமான பிரத்தியகபின்ன பராவரப் பிரஹ்மம். "பகவானே! தேவனே! நீரே யான்; யானே நீர்"

என்னும் சுருதியநுசாரமாக யான் பிரஹ்மம் பிரஹ்மமே யான் என்னும் * வியதிகாரத்தினுல் அகண்டைகரஸமாகச் சாக்ஷாத்கரிக்கப்பட்டபோது அந்தப் பராவரப் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தினுல் இந்தப் பராவரப் பிரஹ்மசாக்ஷாத்காரஞ்செய்பவனுகிய எனக்கு † இருதயக் கிரந்தி பேதமும், சர்வ சம்சய நிவிருத்தியும், சர்வகர்மக்ஷயவடிவமுமான பரம புருஷார்த்தம் செவ்வையாய் ¶ வெளிப்படுக. (உக)

அகங்காரம் ஆத்மா வென்னும் இரண்டன் ஒருமை மயக்கத்தின் நிவிருத்திவடிவ இக்கிரந்திபேதம் திடமாகுக. (உஉ)

---

* வியதிகாரம்=ஒதப்புரோதபாவம்.

† இருதயக்கிரந்திபேதம், சர்வசம்சயநிவிருத்தி. சர்வ கர்மக்ஷயம் என்னும் இவற்றின் இலக்ஷண முதலியவற்றை ஸ்ரீ பாலபோதத்தின் அம்வது உபதேசத்தில் விரிவாய்க் கூறியிருத்தல் காண்க.

¶ முன் அறியக்கூடாததாய் மறைந்திருந்த தொன்று பின் அறிய வருதலை வெளிப்படுதல் என்பர். இதனையே ஆரியத்தில் ஆவிர்பாவ மென்பர்.

ஆத்மா தேகாதிகளின் வேறுப்பட்டதா? அன்று? வேறுபட்டதாயினும் கர்த்திருத்துவாதி தர்ம சம்பந்தமுடையதா? அன்று? கர்த்திருத்துவமில்லாததாயினும் அதற்கும் பிரஹ்மத்திற்கும் அபேதம் இருக்கிறதா? இல்லையா? அபேதமிருக்கினும், அதன் ஞானம் கர்மாதிகளோடு கூடியதாய் முக்திக்குச் சாதனமா? அல்லது தனியே முக்திக்கேச் சாதனமா? தனியயாயினும் ஆத்மா சாக்ஷியா? கர்த்தாவா? சாக்ஷித்துவமிருக்கினும் இதற்குப் பிரஹ்மத்துவமுண்டா? இல்லையா? பிரஹ்மத்துவமிருக்கினும் அவ்வுணர்ச்சியால் அறியக்கூடியதா? கூடாததா? கூடியதன்மையிருக்கினும் அதன் உணர்ச்சி மாத்திரத்தால் முக்தி உண்டா இல்லையா? எனக்குப் பரமார்த்தமாகப் பிரஹ்மத்துவமுண்டா? இல்லையா? பிரஹ்மத்துவமுளதாயினும் அத்தன்மைய வடிவம் எனக்குச் சாக்ஷாத்கரிக்கப்பட்டதாகுமா? ஆகாதா? சாக்ஷாத்கரிக்கப்பட்டதாயினும் இதற்குமேல் கர்த்தவ்வியம் உண்டா? இல்லையா! கர்த்தவ்வியம் இல்லாவிடினும் இப்போது எனக்கு ஜீவன் முக்தத்துவமுண்டா? இல்லையா? ஜீவன் முக்

## பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி.

6432 கரு R65(ஷைஷு)

தத்துவமுள்ளதாயினும் வர்த்தமான தேகம் விழுந்த பின் விதேக முக்தி உண்டாகுமா? உண்டாகாதா? அது கிடைப்பினும் காலாந்தரங்களில் மறுபடியும் பிறப்பு உண்டாகுமா? உண்டாகாதா? என்னும் இவை முதலிய சர்வ சம்சயங்களின் நிவிருத்தியும் உண்டாகக்கடவது. (உரு)

ஆரம்பிக்கப்படாதனவும், பின்வரும் பிறப்புகட்குக் காரணமானவைகளும், அநேககோடி ஜென்மங்களில் சம்பாதிக்கப்பட்டனவும், பிராரப்த கர்மங்கட்கு வேறானவைகளுமான சஞ்சித கர்மங்களின் நிவிருத்தி வடிவ பரமபுருஷார்த்தம் செவ்வையாயுண்டாகுக. (உசா)

எது பூர்ணைகத்தைக போதமோ அந்தப் பிரஹ்மம் யான் என்னும் பிரஹ்மாத்மாநுபவ மாத்திர நிச்சயத்தில் புத்தி நிரந்தரம் இருக்கக்கடவது. (உரு)

எந்தக்காலத்தில் துவைதத் தோற்றமில்லையோ, நித்திரையும் வரவில்லையோ, அந்தக்காலத்தில் அறியப்படுகின்ற சுகம் எது இருக்கிறதோ, அது பிரஹ்

மாநந்தம் என்று பிரஹ்மாநந்தாநுபவ சித்தி நிரந்தரம் உண்டாகுக. (உசு)

மனோவியாபார மில்லாத சமயத்தில் எச்சுகம் தோற்றுகின்றதோ, அச்சுகம் ஆத்மரூபமென்னும் ஆத்ம நிச்சயம் செவ்வையாயுண்டாகுக. (உஎ)

தன் சொப்பனம் தனக்கு வேறாக எப்படி இல்லையோ அப்படியே ஜாக்கிரமும் தனக்கு வேறாக இல்லையென்னும் அத்விதீயாத்மாநுபவம் செவ்வையாய் உண்டாகுக. (உஅ)

வாசனாக்ஷயம் மனோநாசம் என்னும் இரண்டினாலும் வாசனையில்லாத விருத்தி சூனியமான சித்தத்தில் சம்சயம் விபரியயம் என்னும் தோஷமிரண்டன் இன்மையினால் பிரதிபந்தமின்மையால் உண்டாகிய தத்துவஞானம் பாதிக்கப்படாவண்ணம் செவ்வையாய் இரக்ஷிக்கப்பட்டதாகுக. (உகூ)

ஐந்தாவது முதலிய மூன்று பூமி வடிவ ஜீவன் முக்தி சம்பாதிக்கப்பட்டபோது துவைதத் தோற்றமின்மையால் சம்சயவிபரியயப் பிரசங்க மின்மை

யால் உண்டாகிய தத்துவஞானம் பாதிக்கப்படாத வண்ணம் செவ்வையாய் இரக்ஷிக்கப்பட்டதாகுக. (௨)

சொப்பனத்தில் ஸ்தூலசரீரம் தோற்றுவிடினும் இந்தஜாக்கிரமுதலிய அவஸ்தை நான்கில் எந்தச் சித்துவடிவ ஆத்மா மணிகளில் சூத்திரம்போல் உள்ளீடாக நிரந்தரம் தோற்றுகின்றதோ அந்தச் சித்துவடிவ ஆத்மாவே யான், சரீரமுன்றும் யானல் லன் என்று * அந்வயவெதிரேகங்களால் சரீரமுன்றன் வியாவிருத்தி இன்மை)யையும் அதன் சாக்ஷி சைதன்னியத்தினது அநுவிருத்தி (உண்மை)யை யும் பார்க்கின்ற எனக்குச்சரீரமுன்றன் வேறுபட்ட தன்மையநுபவம் செவ்வையாய் வெளிப்படுக. (௩)

பகவானாகிய பரமேசுவரனைப் பிரீதி பூர்வகமாய்ப் பஜிக்கும் என்பேரில் அநுக்கிரகத்தின்பொருட்டுப் பகவான் வாசுதேவர் ஆத்மதன்மையில் இருப்பவராய் விவேகவடிவ பக்தப்பிரசாத சிநேகத்தினால் (எண்ணெயினால்) நனைக்கப்பட்டதும், ஞானபாவனை யபிநிவேசவாயுவினால் பிரேரிக்கப்பட்டதும், பிரஹ்ம

* அந்வயம் = உடன்பாடு. வெதிரேகம் = எதிர்மறை.

மசரியாதி சாதன சம்ஸ்காரமுடைய பிரஞ்ஞை யாகிய வர்த்தியுடையதும், விரக்தாந்தக்கரணதார மாக விஷயத்தினின்றும் வேறுபட்ட சித்த மென் னும் இராகத்துவேஷாதிகளால் கலக்கப்படுவதான காற்றின்றியதாய் அசலி லிருப்பதுமான நித்தியம் பிரவிருத்தித்துள்ள ஏகாக்கிரதன்மையில் தியா னத்தினற்றோன்றிய நற்காட்சி யென்னும் பிரகாச முடைய ஞானதீபத்தினல் அஞ்ஞானத்தினின் றுண்டாகியதும் அவிவேகத்தினல் உண்டாகியது மான மித்தியா ஞானவடிவ மோகாந்தகாரமான தமம் நாசமாகுக வென்னும் ஆசீர்வாதம் நிரந்தரம் உண்டாகுக. (௩௨)

பரமேசுரனைப் பிரீதியோடு பஜிக்கின்ற பக்தர் கள் எந்த நற்காட்சிலக்ஷணபுத்தி (ஞான)யோகத் தால் ஆத்மவடிவ பகவானகிய பரமேசுவரனை ஆத் மத்தன்மையாகச் சார்கின்றார்களோ (அறிகின்றார் களோ), அத்தப் புத்தியோகத்தினைப் பகவான் வாசு தேவர் எனக்குக் கொடுத்தருளுக என்னும் ஆசீர் வாதம் நிரந்தரம் உண்டாகுக. (௩௩)

அசங்கன் யான் சிதாத்மா யான் என்று பிரத்தியகாத்மாவில் செலுத்தப்பட்ட விருத்தியின்றியதாய்ச் சம்ஸ்கார சேஷமாத்திரத் தன்மையாகச் சூக்ஷ்ம வடிவமாக நிலைத்துள்ள சித்தத்தில் ஆத்மாவின் சொரூபவடிவ பரமாநந்தம் நிரந்தரம் செவ்வையாய் வெளிப்படுக. (கச)

விகாரமின்றித் தன்னிடத்து அத்தியஸ்தமான எல்லாவற்றையும் சாக்ஷாத் மறைப்பின்றிய சொருப்பாபேதமாகக் கருதுகின்றது பார்க்கின்றது என்னும் சாக்ஷியநுபவம் செவ்வையாய் உண்டாகுக. (கரு)

தேகேந்திரியாதி சகல ஜடத்தையும் விளக்குந் தன்மையினால் சித்துவடிவமா மென்னும் சிதாத்மாநுபவம் செவ்வையா யுண்டாகுக. (கசு)

ஆத்மாவினிடத்து ஒருபோதும் அப்பிரியத்துவமின்மையாலும் மேலானபிரியத்திற்கு விஷயமாந் தன்மை யிருத்தலாலும் ஆத்மா பரமாநந்தவடிவ மென்னும் ஆநந்தாத்மாநுபவம் செவ்வையா யுண்டாகுக. (கஎ)

விளக்கமின்மைவடிவ விச்வத்திற்கு விளக்கவடிவ சைதன்னியத்தின் சந்நிதியின்றி ஒருபோதும் விளங்குதலின்மையால் விளக்கவடிவ ஆத்மா எல்லாவற்றினிருப்பதா மென்னும் எல்லாவற்றினிருக்கும் ஆத்மாநுபவம் செவ்வேயுண்டாகுக. (௩௮)

அசத்து ஜடத்துக்கவடிவினவாகிய அகங்காராதிகளினும் விலக்ஷணத் தன்மையாக பிரதிகூலத் தன்மையான சத்திய ஞானாநந்தாதி வடிவத்தால் சித்து விளங்குவதா மென்னும் பிரத்தியகாத்மாநுபவ சித்தி யுண்டாகுக. (௩௯)

பின்விளங்குவதான ஜடத்திற்கு முன்னதாக விளங்கும் சைதன்னியமே வாஸ்தவடிவ மென்று நிச்சயித்து ஜடத்தினை உபேக்ஷித்துச் சின்மாத்திரமேயாகச் சித்தம் நிரந்தரம் ஆகக்கடவது. (௪௦)

இவையாவுமே பிரஞ்ஞானத்தின் நாமதேயங்களாகின்றன என்னும் வாக்கியத்தினால் தேகேந்திரியாதிசாக்ஷிவடிவமான எந்தப் பிரஞ்ஞானதுவம்பதார்த்த வடிவம் நிர்ணயிக்கப்பட்டதோ அதுவே "இது பிரஹ்மம்" என்றல் முதலிய வாக்கியத்தினால்

ஜகத்காரணமாக நிர்ணயிக்கப்பட்ட பரப் பிரஹ்ம மாம். இவ்விரண்டற்கும் சிறிதும் பேதமில்லை யென்னும் ஐதரேய மகாவாக்கியஜந்யஞானசித்தி நிரந்தரம் உண்டாகுக. (சக)

எதனால் எங்கும் நிலைத்துள்ள பிரஞ்ஞானம் பிரஹ்மமோ, அதனால் என்னிடத்தில் நிலைத்துள்ள பிரஞ்ஞானம் பிரஹ்மமே; பிரஞ்ஞானத் தன்மை யபேதத்தால் என்னும் ஐதரேய மகாவாக்கியத்திற் கூறிய ஜீவப்பிரஹ்மவைக்கிய ஞானசித்தி நிரந்தரம் உண்டாகுக. (சஉ)

ஆத்மசந்நிதியில் இருப்பதனால் ஜடவடிவதேகா திகளுக்கும் விளங்குந்தன்மை யிருத்தலின் ஆத்மா சித்துவடிவ மென்னும் சிதாத்மாநுபவம் செவ்வை யாய் உண்டாகுக. (சந)

ஆத்மாவோடு கூடியிருத்தலால் துக்க வடிவமான தேகாதிகளுக்கும் மிகுந்த பிரியத்திற்கு விஷயமாந் தன்மை யிருத்தலால் ஆத்மா பரமாநந்தரூபமா மென்னும் ஆத்மாநந்தாநுபவம் செவ்வையா யுண் டாகுக. (சச)

தேசத்தினுலும் காலத்தினுலும் வஸ்துவினு லும் பரிச்சேதமின்றிய அத்விதீயப்பிரஹ்மாத்மா நுபவசித்தி யுண்டாகுக. (சரு)

முன்பின் விசாரமின்றித் திடீரென் றுண்டாகும் ச்ரோத்ரமுதலிய விருத்திவிசேஷத்திற்குக் காரண மான சித்தத்துள்ள சம்ஸ்காரமானவை விவேக ஞானத்தினுலுண்டாகிய பொறுமை (முதலிய) வா சனை திடமானபோது நசிக்கப்படுவதா யிருத்தலின் வெளிநிமித்தத்தால் ச்ரோத்ராதிக ளுண்டாகாமை செவ்வையா யுண்டாகுக. (சசு)

எவனுடைய பிரசாதத்தால் யானே விஷ்ணு என் னிடத்திலேயே எல்லாம் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்றிவ்வாறு ஆத்மசொருபத்தினை அறிகின்றே னே, அவன் பாதாரவிந்தங் களிரண்டிலும் நழுவாத பக்தி நிரந்தரம் உண்டாகுக. (சஎ)

அசித்துவடிவ சகல ஜகத்தும் சித்தின் சந்நிதி யில் இருத்தலால் சித்துவடிவ ஆத்மா எல்லாவற் றினிருப்பதா மென்னும் எல்லாவற்றினிருக்கும் ஆத்மாநுபவம் செவ்வையா யுண்டாகுக. (சஅ)

எல்லாப்பொருட்கும் சாதகமாந்தன்மைக் காரணத்தினாலும், எல்லாவற்றோடும் சம்பந்தமுடையதா யிருத்தலாலும் ஆத்மா சர்வபரிபூர்ணன் என்னும் பரிபூர்ணாத்மாநுபவம் செவ்வையா யுண்டாகுக. (சகூ)

தேசகால மறைப்பின்றியதாயிருத்தலாலும், பரோக்ஷஞான ஹேதுவாகாமையாலும் வேறு சாதனங்களின் அபேக்ஷயின்றித் தானே பிரகாசிக்கும் சிதாத்மா எப்போதும் தானாய்ப்பெறப்பட்ட அபரோக்ஷவடிவினன் என்னும் அபரோக்ஷாநுபவம் செவ்வே வெளிப்படுக. (ருO)

எங்கு எப்பொருளைக் காண்கின்றதோ அப்பொருளோடு வேறிடத்துப் பின்பற்றி வாராமையின் ஆத்மா அசங்கன் என்னும் அசங்காநுபவம் செவ்வையா யுண்டாகுக. (ருக)

நிரவயவத் தன்மையினாலும், அசங்கத் தன்மையினாலும் ஆத்மாவிற்கு எதனோடும் சம்பந்தமின்மையால் ஆத்மா நித்திய முக்தனென்னும் நித்தியமுக்தாத்மாநுபவம் செவ்வையா யுண்டாகுக. (ருஉ)

அறியப்பட்டதா யிருந்துகொண்டு அபரோக்ஷ விவகாரத்திற் குரியதா யிருத்தலின் ஆத்மா சுவயம் பிரகாச மென்னும் சுவயம்பிரகாசாத்மாநுபவம் செவ்வே உண்டாகுக. (ருங)

வேறு சாதனத்தினை நோக்காது தானே விளங்குவதா யிருத்தலின் ஆத்மா சுவயம் பிரகாசமா மென்னும் சுவயம்பிரகாசாத்மாநுபவம் செவ்வே யுண்டாகுக. (ருச)

இவ்வாறு ஸ்ரீ வித்தியாரண்யசுவாமிகளா
லருளிச்செய்யப்பட்ட
பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி
யென்பது
முடிவுபெற்றது.

ஓம் தத்ஸத் பிரஹ்மணே நம:

## விற்பனைக்குத் தயாராயுள்ள புஸ்தகங்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஸ்ரீ பஞ்சதசி (பஞ்சதசப் பிரகரணம்) ... | 9—0—0 |
| ஸ்ரீ விருத்திப் பிரபாகரம் ... | 5—0—0 |
| ஸ்ரீ விசார சாகரம் ... | 3—4—0 |
| [illegible]யோகப் பிரதீபிகை ... | 2—0—0 |
| [illegible]லபோதம் ... | 1—8—0 |
| ஸ்ரீ விருத்தி ரத்னாவலி ... | 0-12—0 |
| [illegible]தாமணி (வேதாந்த பரிச்சேதம்) ... | 0 6—0 |
| [illegible]ந்தாவலி பு-க. அபரோக்ஷாநுபூதி சம்ஸ்கிருத சுலோகமும் தமிழுரையும் ... | 0—8—0 |
| தர்க்க [illegible]ளமுதியும் நியாய பதார்த்தம் 16-ன் இலக்ஷணங்களும் குறிப்புரையுடன் (2-ம் பதிப்பு) ... | 0-10—0 |
| கீதைக்கொத்து பு-க. உத்தர கீதை சம்ஸ்கிருத சுலோகமும் தமிழுரையும்) | 0—6—0 |
| சாந்தோக்கியத்துள்ள தத்துவமஸி மகாவாக்கிய உபதேசம், சுகரகஸ்யோபநிஷத்துள்ள நான்கு மகாவாக்கியார்த்தத்துடன் 3-ம் பதிப்பு | 0—3—0 |
| ஸ்ரீ விசார சந்திரோதயம் 4-ம் பதிப்பு அநேக சுருதிப் பிரமாணங்களுடன் முன்பதிப்பினும் விசேஷமாக்கப்பட்டது. ... | 1—8—0 |

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE ...)